**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 014/2023** **நாள்: 12.01.2023**

**'சலனமில்லா மனதினிடம் இந்தப் பிரபஞ்சம் தன்னைக் கையளிக்கின்றது' – லாவோட்சே**

## என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்த பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

பொங்கல் என்பது அடைக்கல அன்னை சபைக்கு
வரலாற்றுச் சிறப்புமிக்க கொண்டாட்டமாகும்.
தமிழர் என்ற நம் அடையாளங்களை வெளிப்படுத்தி
அடைக்கல அன்னை சபை என்ற நம் பாரம்பரியத்தில்
நம்மை வேரோட்டம் பெறச் செய்வது பொங்கல்.
பொங்கல் நம் தாய்த் தமிழோடும், தாய் பூமியோடும்,
நம் பண்பாட்டோடும், உறவுகளோடும்
நமக்குள்ள தொடர்பை தொப்புள் கொடி உறவை வெளிப்படுத்துகிறது.
இந்த நாளில் நாம் தமிழர் என்ற முறையில்
நம் பண்பாட்டின் வேர்களை அலசுவோம்.

தமிழ்ச் சமூகம் அடிப்படையில் பெண் சக்தியில்
நம்பிக்கைக் கொண்ட சமூகம்.
இதை உணர்ந்ததனால் தான்
நம் மேலைநாட்டு மறைபோதகர்கள்
அன்னை மரியாள் பக்தியை
நம் கத்தோலிக்க மறையில் வளர்த்தார்கள்.
இன்று வரை நாம் மாதா கோயில்
கிருத்தவர்களாகவே அறியப்படுகிறோம்.
இந்தப் பண்பாடு நம்மைப்
பெண்ணியத்திற்கு நெருக்கமாகக் கொண்டு செல்கிறது.

பெண்ணியம் என்று சொல்லும் போது
ஏதோ பெண்ணாகப் பிறந்திருக்கிறோம் என்று
சாதாரணமாக எடுத்துக்கொள்வது சரியானதல்ல.
பெண் தான் அனைத்து ஆற்றலின் பிறப்பிடம்.
அவள் தான் சக்தி. அவள் தான் உயிராற்றல்.
அவள் தான் நம்பிக்கை. அவள் தான் பேரன்பு.

அவள் தான் கருணை. அவள் தான் பொறுமை.
அவள் தான் பொறுப்பு. அவள் தான் எழுச்சி.
அவள் தான் விடியல். அவள் தான் துருவ நட்சத்திரம்.

ஆம்; வாழ்வின் அனைத்து பரிமாணங்களும்
வாழ்வதற்கான அனைத்து ஆற்றலும்
அவளிடமிருந்தே பொங்குகின்றன.
அதனால் பொங்கலும் பெண்மையும் ஒன்றே.
நாம் பெண் துறவிகளாக இருப்பதனால்
பெண்மையை உணர்ந்து வாழ்கிறோமா? என்ற கேள்வி
என்னில் பலமுறை எழுவதுண்டு.
இந்தப் பெண்மையின் உயிராற்றல் வறண்டு போனவர்களாக
நாம் வாழ்வதைக் கண்டு கவலையடைந்ததும் உண்டு.

இந்தப் பொங்கல் நன்னாளில்
நம் பெண்மையின் பிரவாகம் பொங்கட்டும்.
பெருக்கெடுத்து ஓடட்டும். நாம் வாழும்
இடங்களில் சக்தியாக இருப்போம்.
எப்போதும் நம்மைச் சுற்றி உயிராற்றல்
உற்பத்தியாகிக் கொண்டே இருக்க வேண்டும்.
கருணை நம் வழியெங்கும் வழிந்தோட வேண்டும்.
பொறுமையும் பொறுப்பும் எழுச்சியும் நம் இல்லங்களில்
பணித்தளங்களில் காவலரணாய் இருக்க வேண்டும்.
இதுவே நம்மைப் பொறுத்தமட்டில் பொங்கல்.

**பொங்கல் நம்மை நம் மண்ணோடு அடையாளப்படுத்துகிறது:**

நமக்கு சோறு போடும் நம் விளைநிலம்
நம் தாகம் தீர்க்கும் நம் நிலம்
நமக்கு கனிம வளங்களைத் தரும் நம் மண்
நாம் வாழும் வீடுகளுக்கான அடித்தளமாகும் நம் தரை
நாம் நடக்க, ஓட, விளையாட, படுக்க,
நிற்க, உட்கார இப்படி எதற்குமே நாம்
சார்ந்திருக்கும் நம் பூமி - இந்தப் பிரபஞ்சத்தின்
அற்புதமான உருவாக்கம்
இந்தப் பூமியை நாம் நேசிப்போம்.

நம் பெற்றோர்கள் நேசித்ததுபோல் நேசிப்போம்.
நம் வயல்களில் செருப்புகூட அணியாமல்
நம் பெற்றோர் வெறுங்காலுடன் நடந்தனர்.

இந்தத் தாய் பூமிக்கான நம் கடமை என்பது
ஏதோ ஏட்டில் இருப்பதற்காக அல்லது
திட்டத்திற்காக அல்லது அறிக்கைக்காக அல்ல.
அது என் இரத்தத்தோடு கலந்தது என்று
நாம் உணரும் போது மட்டும்தான்
நம் பூமியைக் காப்பதற்கான திட்டம்
நமக்கு இயல்பாக மாறும்.

**பொங்கல் நம்மைத் தமிழர்களாய் அடையாளம் காட்டுகிறது:**
எளிமை என்பது தமிழரின் இயல்பு.
இனிமையாகப் பேசுவதும் இணக்கமாக வாழ்வதும்
தமிழருக்கே உரித்தான தனித்தன்மை; இரக்கம் கொள்வதும்
ஈகைக் குணமும் தமிழரின் இரத்தத்தில் கலந்தது.
இருப்பதைக் கொண்டு நிறைவோடு வாழ்வதும்
இல்லாமையிலும் இன்முகத்தோடு இருப்பதும் தமிழரின் மரபு.
அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாமல்
ஆடம்பரம் தவிர்த்து, பொருட்குவிப்பை விரும்பாமல்
'**போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து**'
என்று சொன்னவர்களும் தமிழர்கள் தான்.
எல்லா செயலுக்கும் முன்னால்
கண்காணாத கடவுளை முன்னிறுத்தி
'அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்.
ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்.'
என்று எல்லா உயிர்களுக்கும் அன்பு செய்ய வேண்டும்
என்ற வேண்டுதலைக் கடவுள் முன் வைத்தவன் தமிழன்.

இப்படிப்பட்ட தமிழர் அடையாளங்கள்
நம்மில் இருக்கிறதா? என அலசி ஆராய்வோம்.
நாம் பெண்ணாகவும் இல்லை,
மண் ஆகவும் இல்லை,
தமிழராகவும் இல்லை என்றால்
என்னவாக இருக்கிறோம்? என யோசித்துப் பார்ப்போம்.
பொங்கல் வைப்போம்.
நாம் காணாமல் போட்டவற்றைத் தேடுவோம்.
மறந்து போய்விட்டவற்றை நினைவுபடுத்துவோம்.

**பொங்கலிடுவோம். பொங்கி மகிழ்வோம்.**
நம் பாரம்பரிய **அந்தோணியார் பொங்கலை**

இல்லத்தில் கொண்டாடுவதற்காகவே நம்
தலைமையகத்திலிருந்து அரிசி அனுப்பியிருக்கிறோம்.
எல்லோரும் இணைந்து மகிழ்ச்சியாகப்
பொங்கல் கொண்டாட வேண்டும் என்பதே எம் விருப்பம்.
தயவு கூர்ந்து குழுமங்களில் வேற்றுமை மறந்து
மகிழ்ச்சியோடு அனைவரும் பொங்கல் கொண்டாட வேண்டும்
என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.
பொங்கல் நாளை நன்றியின் நாளாய் கொண்டாடுவோம்.
முன்னோரின் ஆசீர் பெறுவோம்.
பொங்கிப் பெருகும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

## குதூகலமான குழும விழா:

இந்த மாதம் 30 -ஆம் நாள் அனைவரும் குழும விழாவைக் கொண்டாடுகிறோம். உங்கள் குழுமத்தில் அனைவரும் இணைந்து மகிழ்ச்சியோடு குழும விழாவைக் கொண்டாடுங்கள். குழும விழா குழுமத்தில் ஒற்றுமையையும் பரஸ்பர புரிதலையும் நம்பகத்தன்மையையும் உருவாக்குவதற்கு என்பதை மறக்க வேண்டாம். நம் சபை பிரான்சிஸ்கன் பெருங்குடும்பத்தோடு இணைந்த நாளைத்தான் நாம் குழும விழாவாகக் கொண்டாடுகிறோம். பிரான்சிஸ்கன் உலகளாவிய சகோதரத்துவம் நம்மில் ஆழமாக வேரூன்ற அன்போடு வேண்டுகிறேன். **Happy Community Day!**

## COTTAGE INSPECTION COMMITTEE MEET:

நமது கருணைக் குடில் இல்லங்களை முறையாகக் குற்றமின்றி எந்த புகார்களுக்கும் இடமின்றி நடத்த வேண்டும் என மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறேன். இதனை முறையாகச் செய்யும் பொருட்டு நமது குடில் இல்லங்களை ஆய்வு செய்து, பாரபட்சமற்ற அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்காகக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் குடில் இல்லங்களை ஆய்வு செய்வார்கள். குழந்தைகளையும், பணியாளர்களையும் இல்லத்துச் சகோதரிகளையும் கருத்து கேட்பார்கள். அந்த அறிக்கையை என்னிடம் சமர்ப்பிப்பார்கள். அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த உறுப்பினர்களுக்கான கூட்டம் **26.01.2023 அன்று தலைமையகத்தில் நடைபெறும்**. அனைவரும் காலை 09.30 மணிக்குத் தலைமையகத்தில் இருக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

## இடைக்காலத் தணிக்கை:

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுவது போல் இந்த ஆண்டும் இடைக்காலத் தணிக்கை பிப்ரவரி முதல் வாரத்தில் நடைபெறும். இதற்கான அட்டவணை மாநிலத் தலைவிகளால் உங்களுக்கு அனுப்பப்படும். இடைக்காலத் தணிக்கைக்குத் தயாராகுங்கள். பள்ளிகளில் (internal) Original Account Note - book -ஐ பொதுநிதியாளரிடம் கையெழுத்து பெற்றபின்தான் உங்கள் கணக்கு தணிக்கை செய்யப்படும். சிலர் வாய் வழியாகக் காரணம் சொல்கிறார்கள் இது

ஏற்றுக்கொள்ளப்படாது. Original account -இல் கையொப்பம் பெறாதவர்கள் Audit செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## Holy Land திருப்பயணம்:

ஏற்கனவே நமது 22 -வது பொதுப்பேரவையில் முடிவு செய்தபடி **Silver Jubilee** முடித்த அருட்சகோதரிகளுக்கு **Holy Land** திருப்பயணம் செல்ல வாய்ப்பளிக்கப்படுகிறது.

### அதற்கான நிபந்தனைகள்:

- இந்த ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாடும் அருட்சகோதரிகள் வரை இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது.
- Holy Land செல்வதற்கு மூத்த சகோதரிகளுக்குத் தான் முன்னுரிமை வழங்கப்படும்.
- மற்ற Tour போல அல்ல. இதற்கு செலவும் அதிகம். ஏற்பாடுகள் செய்யவும் கால அவகாசம் தேவைப்படுகிறது. அதோடு ஒருமுறை List கொடுத்துவிட்டால் மாற்ற இயலாது.
- எனவே திருப்பயணம் செல்ல விரும்புகிறவர்கள் உங்கள் இல்லத்து Letter Pad பேப்பரில் உங்கள் விருப்பத்தை சபைத் தலைமை அன்னைக்கு எழுதி இல்லத்தலைமைச் சகோதரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் அந்தக் கடிதங்களை ஒன்று சேர்த்து எனக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- நல்ல உடல் நலத்தோடு பிறர் உதவியின்றி நடக்கக்கூடியவர்கள் தான் இதில் கலந்து கொள்ள இயலும். எனவே உங்கள் உடல் நலத்தைக் கருத்தில் கொண்டு பெயர் கொடுங்கள்.
- உங்கள் கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 31.01.2023 ஆகும்.
- ஆண்டுதோறும் 100 பேர் மட்டும் செல்ல இயலும். உங்கள் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்ட பின் உங்களோடு Online - இல் Meeting ஏற்பாடு செய்வேன்.
- இந்த ஆண்டு Golden, Silver Jubilee சகோதரிகளுக்கும் மற்றும் வயதில் மூத்த சகோதரிகளுக்கும் இந்த ஆண்டில் ஏற்பாடு செய்யப்படும் முதல் Batch –ல் இடம் கொடுக்கப்படும்.
- பெயர் பதிவு செய்த பின் Passport ஏற்பாடு செய்வது மற்றும் பிற செயல்பாடுகள் பற்றி Online -இல் உரையாடுவேன்.
- இந்த ஆண்டு செல்கிறவர்கள் விரைவாக அனுமதி பெற்று Passport ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.
- பள்ளியில் பணியாற்றுபவர்கள் department – இல் அனுமதிபெற வேண்டும். அதற்கான வழிமுறைகளைக் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்.
- **அதிமுக்கியமானது ஒருமுறை முடிவு செய்தபின் மாற்றிக் கொண்டிருக்க இயலாது. எனவே தீர்க்கமாக முடிவு செய்யுங்கள்.**

- இளைய சகோதரிகள் கவலை வேண்டாம். உங்கள் Silver Jubilee –யின் போது உங்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

- இந்தத் திருப்பயணம் நம் அர்ப்பணவாழ்வை ஆழப்படுத்தவும் தந்தையின் திருவுளத்தைத் தன் உயிரைக் கொடுத்தும் நிறைவேற்றிய இயேசுவின் பாதையில் வேரோட்டமாகப் பயணிக்கவும் கடவுள் கொடுக்கும் வாய்ப்பாக ஏற்றுக்கொள்வோம்.

**இறைவனின் மிகப்பெரிய கொடை வாழ்வு**

**மனிதப் பிறவியால் மட்டுமே பல்வேறு**

**வித்தியாசமான இரசனைகளை உணரவும் அனுபவிக்கவும் முடியும்.**

**இந்த அழகான அனுபவங்களை அர்த்தமுள்ளதாக்க**

**ஒவ்வொரு நொடியும் உயிர்த்துடிப்போடு வாழ வேண்டும்.**

**பொங்கலைப் போல் பொங்கும் வாழ்வு**

**மங்காமல் உங்களோடு தங்க**

**அன்போடு செபிக்கிறேன். பேரன்போடு ஆசீர்வதிக்கிறேன்.**

என் அன்பும் செபமும் என்றும் உங்களோடு இருக்கும்.







பிரபஞ்சப் பேரன்பில்,

Sr. Maria Philomi FBS

சபைத் தலைமை அன்னை